**தேதி: ஏப்ரல் 25, 2014**

**<u>பிரச்சார டைரி – 25/04/2014</u>**

**அருண் ஜெட்லி**

(*மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்*)

நரேந்திர மோடி வாரணாசி தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்ய வரும்போது, சாலையில் கடல் அலை போல மக்கள் கூட்டம் திரண்டு வந்திருந்தது. இதற்கு முன் இவ்வளவு கூட்டம் கூடுவது மிகவும் அரிதான விஷயம். எதிர்பாராமல் இவ்வளவு அதிகளவில் திரண்டிருந்த கூட்டத்தை நிச்சயமாக 'ஏற்பாடு' செய்யவே முடியாது. இந்தக் கூட்டம் தானாகவே கூடியிருக்க வேண்டும். பொதுவாக, அரசியல் கட்சி தொண்டர்கள்தான் குழுக்களாக ஆதரவு வாகனங்களில் வந்து சேர அழைப்பு விடுக்கப்படுவார்கள். ஆனால், அன்று பெருந்திரளான மக்கள் கடல் போல திரண்டது நிச்சயமாக தன்னிச்சையான ஒரு செயல்தான்.

இந்தளவு வெளிப்படையாகத் தெரிந்த மோடிக்கான மக்கள் ஆதரவைக் கண்டு பிரதமர், நாட்டில் மோடி அலை என்று எதுவும் வீசவில்லை என்று விமர்சித்தார். ஏற்கெனவே மோடி இந்தியா முழுவதும் 400க்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களில் பேசியுள்ளார். அவற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவு மக்கள் பெருந்திரளாக கூடினார்கள். இந்த பிரச்சாரம் முழுவதும் பா.ஜ.க. உறுப்பினர்களுக்கும் அதற்கு ஆதரவு தொகுதிகளிலும் மக்களின் உத்வேகமூட்டும் ஆதரவினால் ஊக்கமடைந்துள்ளனர். நல்ல நிர்வாகத் திட்டங்களை வழங்கும் மோடியின் திறன் மற்றும் எவ்வளவு தடைகள் வந்தாலும் அந்தத் திட்டங்களை செயல்படுத்துவதில் உறுதி, தெளிவாக நிரூபணமானவை. வட, மத்திய மற்றும் மேற்கு இந்தியாவில் கணிசமான பா.ஜ.க. ஆதரவு தளத்தைக் கண்டுள்ளது. இந்த இடங்களில் இவ்வளவு தெளிவான மோடி அலை எதிர்பார்க்கக் கூடியதுதான். ஆனால், நாட்டின் கிழக்கு மற்றும் தென் பகுதிகளிலும்கூட மோடி அலையினால் பா.ஜ.க.வின் வாக்கு விகிதம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

இதற்கு முற்றிலும் மாறாக, உள்ளது காந்திகளின் பிரச்சாரம். ஆட்சி காலம் முடிந்து தேர்தலை சந்திக்கும் ஒரு அரசு தங்கள் ஆட்சிகாலத்தின் சாதனைகளைப் பற்றி எடுத்துக்கூறி பிரச்சாரம் செய்யாமல் எதிர்மறை பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது இதுவே முதல் முறை. ஆட்சியில் இருக்கும் காங்கிரசுக்கு எதிரான நிலவரம் குறித்து விவாதிக்கும்போது, பதவியில் இருப்பவரை தாக்குவதில் சோனியா குடும்பத்தினர் ஈடுபட்டுள்ளனர். எதிர்கட்சிகளை குற்றம் கூறுவதன் மூலம் ஆளும் கட்சி தன் தோல்வியை மறைப்பது வரலாற்றிலேயே மிக அரிது. ஆனால் இந்த அவநம்பிக்கை யுத்தி பலனளிக்கப்போவதில்லை. கிட்டப்பார்வை கொண்ட டாக்டர் மன்மோகன் சிங் மோடி அலை வீசுவதை பார்க்க முடியாதவராக இருக்கலாம். ஒருவேளை அவரால் பார்க்க முடிந்தும் அதை

ஒப்புக்கொள்ள முடியவில்லையோ? இந்த தேர்தல் ஒரு இரட்டைத் தன்மை போக்கு காணப்படுகிறது. முதலில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு எதிரான நிலவரம். பதவியில் இருக்கும் அரசு எதிரான நிலவரத்தின் முக்கிய அம்சம் தலைமையின் தோல்வி. வாக்காளர்களின் இரண்டாவது எதிர்வினைக்கு காரணம் இதன் தலைமையின் தோல்விதான். மன வேதனை அடைந்துள்ள, தீர்வுகளுக்காகக் காத்திருக்கும் இந்தியாவின் நம்பிக்கை சின்னமாக மோடி மாறியுள்ளார். இந்த இரண்டு எதிர்வினைகள் ஒன்றிணைந்து தனது பிரதமராக மோடியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற ஆசையை வலுப்படுத்தியுள்ளது. விஷம் கக்கும் காங்கிரஸ் தலைவர்கள் செய்வதறியாது இதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சிதம்பரங்கள், சிபல்கள், திவாரிகள், ஆனந்த் சர்மாக்கள் மோடியைப் பற்றிய முரட்டுத்தனமான அவமரியாதையான வார்த்தைகள் தங்களைத்தான் திருப்பித் தாக்கும் என்று புரிந்துகொண்டு விட்டனர்.

---------------------------------------------------------------

பஞ்சாபில் மோடி

நரேந்திர மோடி பஞ்சாபில் இன்று ஐந்து கூட்டங்களில் பேசுகிறார். அவர் குர்தாஸ்புர், பதிந்திரா, ஹோஷியாபூர், லூதியான மற்றும் அமிர்தசரஸ் ஆகிய நாடாளுமன்றத் தொகுதிகளில் இன்று பிரச்சாரம் செய்கிறார். பஞ்சாப் வியுக வெற்றியாளருக்காக ஆவலுடன் காத்திருக்கிறது.

✻✻✻✻✻